09.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரியமான் கடற்கரைக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு



ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே அரியமான் கடற்கரைக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.பாக்ஜலசந்தி கடலின் ஒரு பகுதியாக அரியமான் கடற்கரை உள்ளது. இந்த கடற்கரை ராமநாதபுரம் அருகே சாத்தக்கோன் வலசை ஊராட்சியில் 2 கி.மீ., நீளத்தில் 150 மீ., அகலத்தில் அமைந்துள்ளது. ஓசையில்லாத நீலக்கடலும், மின்னி திளங்கும் வெண்மையான மணலும் சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது. கடல் எப்போதும் அமைதியாகவும், கரையோர சவுக்கு மரங்களின் குளிர்காற்று வீசியப்படியே உள்ளன. கடலில் 50 அடி துாரம் வரை ஆழம் இருக்காது. படகு சவாரியும் உள்ளது. கடற்கரை முழுவதும்

சுத்தமாக காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் அதிகளவு விரும்பி வருகின்றனர்.

இந்த கடற்கரை ராமநாதபுரம்--ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ளதால் சுற்றுலா பயணிகள் வந்து செல்ல ஏதுவாக உள்ளது. தூத்துக்குடி, சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, மதுரை போன்ற மாவட்டங்களை சேர்ந்தோரும் அதிகளவு வருகின்றனர். அப்பகுதியில் பூங்கா, நீர்சறுக்கு போன்றவை அமைத்து தர வேண்டும்.

## வறட்சியால் 40 சதவீத தானிய உற்பத்தி குறைவு

பெங்களூரு: கர்நாடகாவில் ஏற்பட்டுள்ள வறட்சியினால், 40 சதவீதம் தானியங்கள் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், அரசுக்கு, 15,636 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் மொத்தம் உள்ள, 177 தாலுகாக்களில், 136ல், வறட்சி ஏற்பட்டுள்ளது. மொத்தம், 1.8 கோடி ஏக்கரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், 31 லட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்தாண்டில், 140 லட்சம் டன் தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 60 சதவீதம் மட்டுமே ஈடேறியுள்ளது.சாகுபடி பணிகள் துவக்கப்பட்ட பின், 81.7 லட்சம் ஏக்கர் பயிரில், 45 சதவீதம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமின்றி, சமீபத்தில் பெய்த ஆலங்கட்டி மழை காரணமாகவும் பயிர் சேதமடைந்ததால், தானிய உற்பத்தி குறைந்துள்ளது. விவசாய துறை தகவலின்படி, பருப்பு வகைகள், 30 சதவீதம்; தானியங்கள், 42 சதவீதம்; எண்ணெய் வித்துகள், 52 சதவீதம்; வர்த்தக பயிர்களான, பருத்தி மற்றும் புகையிலை, 35 சதவீதம் உற்பத்தி குறைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.ஈரத்தன்மை குறைந்த

காரணத்தால், 29.52 லட்சம் ஏக்கர் பருப்பு வகைகளும், 52.76 லட்சம் ஏக்கர் தானியங்களும், 14.65 லட்சம் ஏக்கர் எண்ணெய் வித்துகளும், 8.9 லட்சம் ஏக்கர் வர்த்தக பயிர்களும் நாசமடைந்தன. இதனால் அரசுக்கு, 15.63 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசிடம், 3,800 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு வழங்கும்படி, மாநில அரசு கோரியுள்ளது.மலை நாடு பகுதியில், 27 சதவீதம் மழை பற்றாக்குறை காரணமாக, அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது. 13 முக்கிய அணைகளுக்குமான மொத்த கொள்ளளவு, 860 டி.எம்.சி., தண்ணீருக்கு பதிலாக, 470 டி.எம்.சி., தண்ணீரே கிடைத்துள்ளது.

## இன்று எங்கெங்கு மழை பெய்யும்?

சென்னை:'தமிழகத்தின் வடமாவட்டங்கள் மற்றும் உள்மாவட்டங்களில், அடுத்த, 24 மணி நேரத்துக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.அந்த மையம் மேலும் கூறியுள்ளதாவது: வெப்ப சலனம் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், ஒரு சில இடங்களில் மழை பெய்யலாம். சென்னையை பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்யலாம். கடந்த, 24 மணி நேரத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காட்டில், அதிகபட்சமாக, 12 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இவ்வாறு வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

## அரிசி விலையும் உயர்கிறது

சேலம்,:நெல்லுக்கான ஆதார விலையை அரசு உயர்த்தி உள்ளதால் அரிசி விலையும் கிலோவுக்கு ஆறு ரூபாய் வரை உயரும் அபாயம்

ஏற்பட்டுள்ளது.தமிழக அரசு நெல்லுக்கான ஆதார கொள்முதல் விலையை மோட்டா ரகத்துக்கு, கிலோ 13.50 ரூபாயில் இருந்து 14.60 ஆகவும்; சன்ன ரகத்துக்கு 14.10ல் இருந்து 15.10 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.இந்த விலை உயர்வு இம்மாதம் 1ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ள நிலையில் இன்னும் ஒரு வாரத்தில் அரிசியின் விலையும் மூன்று முதல் ஆறு ரூபாய் வரை உயரும்.

**குட்லாடம்பட்டியில் 'குளுகுளு' : களை கட்டும் ரம்யமான 'சீசன்'**



வாடிப்பட்டி:மதுரை மாவட்டம் குட்லாடம்பட்டி தாடகைநாச்சியார் அருவியில் தண்ணீர் விழுகிறது. 'குளுகுளு' சீசன் ரம்யமாக துவங்கியுள்ளது.மதுரை வாடிப்பட்டி அருகே சிறுமலை அடிவாரத்தில் குட்லாடம்பட்டி உள்ளது. சிறுமலையில் எண்ணற்ற நீரூற்றுகள் உள்ளன. இவை ஒருங்கிணைந்து திண்டுக்கல் மாவட்டம் பள்ளபட்டியில் மதகு அருவியாவும், குட்லாடம்பட்டியில் தாடகைநாச்சியார் அருவியாகவும் கொட்டுகிறது.

ஆண்டுதோறும் நவம்பர் இரண்டாவது வாரத்தில் சீசன் துவங்கி டிசம்பர் வரை நீடிக்கும். இந்தாண்டு ஜூனில் மழை பெய்தது. அருவிகளில் தண்ணீர் கொட்டியது. சிறுமலையில் மழை பெய்யும் போதெல்லாம் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரிக்கும். தற்போது மழை பெய்து வருவதால் அருவிகளில் குளிக்கும் அளவுக்கு தண்ணீர் விழுகிறது. 'பார்' அருவிவனம், வன விலங்கு, சுற்றுச்சூழலை காக்க சுற்றுச்சூழல் குழு, வேட்டைத்தடுப்புக்குழு வனத்துறையால் ஏற்படுத்தப்பட்டது.

வனத்திற்கு வருவோரை 'டிரக்கிங்' அழைத்து சென்று சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இதில் கிடைக்கும் வருவாய், கிராம வளர்ச்சிக்கு வழங்கப்படுகிறது. குட்லாடம்பட்டியில் இக்குழுவினரை காணவில்லை. இதனால் அருவியை மது அருந்தும் 'பார்' ஆக மாற்றியுள்ளனர். பாலிதீன் கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்களை வனத்தில் வீசி சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவித்து வருகின்றனர். வன அலுவலர் எச்சரிக்கைமதுரை மாவட்ட வன அலுவலர் நிகார்ரஞ்சன் விடுத்த எச்சரிக்கை: அருவியை தவிர, வனத்திற்குள் செல்லக்கூடாது. மீறுவோர் கைது செய்யப்படுவர். பாலிதீன், பிளாஸ்டிக் கொண்டு சென்றால் அபராதம் வசூலிக்கப்படும். பாலிதீன் கழிவுகளை சம்மந்தப்பட்டவரே அகற்ற வேண்டும். வனத்திற்குள் மது அருந்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## கரும்பு வெட்டுக்கூலியால் விவசாயிகள் பாதிப்பு இயந்திரம் கண்டுபிடிக்க இயக்குனர் யோசனை

மதுரை:"கரும்பு வெட்டுக்கூலியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். அதை தவிர்க்க கரும்பு வெட்டும் இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டும்," என தமிழ்நாடு சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குனர் சங்கரலிங்கம் கூறினார்.மதுரை அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை சார்பில் 46வது கரும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியாளர்கள் கருத்தரங்கு நடந்தது.சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர் சங்கரநாராயணன் வரவேற்றார். தலைமை வகித்து சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குனர் சங்கரலிங்கம் பேசியதாவது: உழவன் கணக்கு பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்பர். கரும்பு விவசாயமும் பத்து ஆண்டுகளாக முன்னேற்றம் இல்லாமல் உள்ளது. அதிலும் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் நிலைமை மோசம். வரவை விட செலவு அதிகம். குறிப்பாக கரும்பு

வெட்டுக்கூலியால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். நெல் அறுவைக்கு 'பவர் டிரில்லர்' இயந்திரம் கண்டுபிடித்தது போல், கரும்பு வெட்ட இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டும். இந்தியாவில் கரும்பு மூலம் ஆண்டுக்கு 80 ஆயிரம் கோடி ரூபாய்க்கும், தமிழகத்தில் ஆண்டுக்கு ஏழாயிரம் கோடி ரூபாய்க்கும் வர்த்தகம் நடக்கிறது. இத்துறையை மேம்படுத்த பாடுபட வேண்டும் என்றார். கோவை கரும்பு ஆராய்ச்சி நிலைய இயக்குனர் பக்ஷிராம், கோவை பல்கலை துணை வேந்தர் (பொறுப்பு) ஆனந்தகுமார், ஆராய்ச்சி இயக்குனர் மகேஸ்வரன், பயிர் இனப்பெருக்க இயக்குனர் கணேசமூர்த்தி, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, மதுரை வேளாண் இணை இயக்குனர் சாரநாத்பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர். கரும்பு அபிவிருத்தி அலுவலர் மணிமாறன் நன்றி கூறினார்.

விவசாயிகள் இல்லாத கருத்தரங்கு: மதுரை கலெக்டர் சுப்பிரமணியன் கூறுகையில், "நூற்பாலையும், சர்க்கரை ஆலையும் மூன்றரை கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. ஆஸ்திரேலியா 85 சதவீதம் உற்பத்தி செய்கிறது. இந்தியா 62.08 சதவீத அளவிலேயே உள்ளது. இது மாற வேண்டும். சர்க்கரை ஆராய்ச்சி கருத்தரங்கில் முன்னணி விவசாயிகளை கலந்து கொள்ள செய்வதன் மூலம் மட்டுமே திட்டங்கள் செயல்வடிவம் பெறும். அடுத்து நடக்கும் கருத்தரங்குகளில் விவசாயிகளையும் சேர்த்து கொள்ள வேண்டும்," என்றார். இதே கருத்தை கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் பழனிச்சாமி வலியுறுத்தினார்.

**பனை கருப்பட்டி விலை எகிறியது**



ராமநாதபுரம்:வரத்து குறைந்ததால் ராமநாதபுரத்தில் 10 கிலோ பனை கருப்பட்டி விலை ரூ.200 வரை உயர்ந்து உள்ளது.தமிழகத்தில் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. இதில் 1.5 கோடி மரங்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் உள்ளன. இதைநம்பி ஒரு லட்சம் பனைத் தொழிலாளர்கள் உள்ளனர். பனையில் இருந்து எடுக்கப்படும் பதநீரில் கருப்பட்டி, கற்கண்டு தயாரிக்கப்படுகின்றன. இவை மருத்துவ குணம் உடையது. மேலும் புகையிலை பதப்படுத்தும் பொருளாகவும் பயன்படுகிறது. இதனால் வெளிநாடு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மழை காலம் துவங்கியதால் கருப்பட்டி வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை 10 கிலோ பெட்டிக்கு ரூ.200 வரை அதிகரித்துள்ளது. ஆயிரம் ரூபாய்க்கு விற்ற ஒரு பெட்டி ரூ.1,200 ஆக உயர்ந்துள்ளது.

கருப்பட்டி வியாபாரிகள் கூறியதாவது: மார்ச் முதல் மே வரை ஒரு பனை மரத்தில் தினமும் 6 லிட்டர் பதநீர் கிடைக்கும். 18 லிட்டர் பதநீரை காய்ச்சினால் 10 கிலோ கருப்பட்டி எடுக்க முடியும். மழை காலம் துவங்கியுள்ளதால் ஒரு மரத்திற்கு 2 லிட்டர் மட்டுமே பதநீர் கிடைக் கிறது. இதனால் கருப்பட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலையும் அதிகரித்துள்ளது, என்றார்.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைந்தது

மேட்டூர் : மழை குறைந்ததன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்வரத்து, 20,970 கனஅடியிலிருந்து 12,544கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.78 அடியாகவும், நீர் இருப்பு 33.37 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**மாட்டு சந்தையில் 90 சதவீதம் விற்பனை: கன்று குட்டிகளுக்கு கிராக்கி**

ஈரோடு: ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில், கன்று குட்டிகள் விற்பனை அதிகரித்துள்ளது.

ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டு சந்தையில் புதன் அன்று அடி மாட்டு சந்தையும், வியாழன் அன்று கறவை மாட்டு சந்தையும் நடக்கிறது. நேற்று நடந்த சந்தையில் மதுரை, தேனி, கம்பம், தஞ்சை, காங்கேயம், திருச்சி போன்ற பகுதியில் இருந்து பசு, எருமை, கன்றுக்குட்டிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. ஆந்திரா, கோவா, கர்நாடகா போன்ற வெளிமாநில வியாபாரிகளும், தர்மபுரி, ஓசூர், உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும், பால் பண்ணை மற்றும் விவசாயிகள் என பலதரப்பட்ட மக்களும், இவற்றை வாங்கிச் சென்றனர். நேற்று நடந்த சந்தையில், 550 பசு, 450 எருமை, 250 கன்று குட்டிகள் விற்பனைக்கு வந்தன. பசுமாடுகள், 18,000 முதல், 39,000 ரூபாய் வரை விலை போனது. எருமை மாடுகள், 19,000 முதல், 39,000 ரூபாய் விலை போனது. கன்று குட்டிகள், 1,500 முதல், 5,000 ரூபாய் வரை விலை போனது. நேற்று நடந்த சந்தையில் மட்டும் கன்று குட்டிகள் அனைத்தும் விற்பனையாகி விட்டது. மழை சீசன் துவங்கி உள்ளதால், இனி ஐந்து

மாத காலத்துக்கு தீவனத்துக்கு பிரச்னை இருக்காது என, கூறப்படுகிறது. விற்பனைக்கு வந்த மாடுகளில், 90 சதவீதம் விற்பனையானது.

## பழநி திருஆவினன்குடி கோயிலில் சோலார் மின் உற்பத்தி துவக்கம்



பழநி,:பழநி திருஆவினன்குடி கோயிலில் ரூ.7 லட்சம் மதிப்பிலான சோலார் (சூரிய சக்தியில் மின்சாரம் தயாரிக்க) மின் உற்பத்திக்காக 40 பேனல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம் பழநி திருஆவினன்குடிகோயில் சோலார் மின் உற்பத்திக்காக ரூ.7லட்சம் செலவில் ராஜகோபுரம் அருகே 40 பேனல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 10 கிலோ வாட் மின்சாரம் கிடைக்கும். அதாவது சராசரியாக நாள் ஒன்றுக்கு 50 யூனிட் வீதம் 1,500 யூனிட் வரை வெயிலின் தாக்கத்திற்கு ஏற்றவாறு மின்சாரம் உற்பத்தியாகும். இது நேற்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.கோயில் அதிகாரி ஒருவர் கூறுகையில்,“ பழநிஉப கோயில்களில் முதன்முதலாக திருஆவினன்குடி கோயிலில் 'சோலார்' அமைக்கப்பட்டுள்ளது. இது கோயில் கம்ப்யூட்டர் சர்வருடன் இணைக்கப்பட்டுள்ளதால், சோலார் பேனல் செயல்பாடுகள், அன்றைய மின்உற்பத்தி நிலவரம் உள்ளிட்டவற்றை பொறியாளர்கள், அதிகாரிகள் அலுவலகத்தில்

இருந்தே தெரிந்துகொள்ள முடியும். சோலார் மின்சாரம் கோயிலில் உள்ள ஏ.சி., பேன் உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மின்கட்டணம் ஓரளவிற்கு மிச்சமாகும். இதன் செயல்பாட்டை பொறுத்து படிப்படியாக அனைத்து கோயில்களிலும் சோலார் பயன்படுத்தப்படும்," என்றார்.

## இன்று எங்கெங்கு மழை பெய்யும்?

சென்னை:'தமிழகத்தின் வடமாவட்டங்கள் மற்றும் உள்மாவட்டங்களில், அடுத்த, 24 மணி நேரத்துக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.அந்த மையம் மேலும் கூறியுள்ளதாவது: வெப்ப சலனம் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், ஒரு சில இடங்களில் மழை பெய்யலாம். சென்னையை பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்யலாம். கடந்த, 24 மணி நேரத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காட்டில், அதிகபட்சமாக, 12 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இவ்வாறு வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

## செஞ்சி பகுதியில் கன மழை ஏரிகளுக்கு நீர் வரத்து துவக்கம்

செஞ்சி: செஞ்சி பகுதியில் பெய்த கனமழையினால் ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கி உள்ளது.

செஞ்சி பகுதியில் நான்காவது ஆண்டாக இந்தாண்டும் பருவ மழை சரியாக பொழியாமல் ஏமாற்றி வருகிறது. செப்டம்பர் மாதம் துவக்கத்தில் முற்றிலுமாக மழை இல்லாமல், சம்பா நெல் நடவிற்கு கிணறுகளில் தண்ணீரின்றி விவசாயிகள் அவதிப்பட்டனர்.இதே போல் மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள மணிலாவும் மழை இல் லாமல்

காய்ந்து வந்தன.இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுமாரான மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு 11:30 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரையில் கன மழை பொழிந்தது. இந்த மழை செஞ்சியில் 101 மி.மீ., பதிவானது. இந்த மழையினால் ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கி உள்ளது.

இதுவரை காய்ந்து கிடந்த ஏரிகளில், குறைந்த அளவில் தண்ணீர் வந்துள்ளது. தொடர் மழை இருந்தால் ஏரிகளுக்கு மேலும் நீர்வருவதற்கான வாய்ப்பு உள்ளன. இந்த மழையினால் கிணறுகளின் நீர் மட்டம் ஓரளவிற்கு உயருவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

## செஞ்சி பகுதியில் கன மழை ஏரிகளுக்கு நீர் வரத்து துவக்கம்

செஞ்சி: செஞ்சி பகுதியில் பெய்த கனமழையினால் ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கி உள்ளது.செஞ்சி பகுதியில் நான்காவது ஆண்டாக இந்தாண்டும் பருவ மழை சரியாக பொழியாமல் ஏமாற்றி வருகிறது. செப்டம்பர் மாதம் துவக்கத்தில் முற்றிலுமாக மழை இல்லாமல், சம்பா நெல் நடவிற்கு கிணறுகளில் தண்ணீரின்றி விவசாயிகள் அவதிப்பட்டனர். இதே போல் மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள மணிலாவும் மழை இல் லாமல் காய்ந்து வந்தன.இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுமாரான மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு 11:30 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரையில் கன மழை பொழிந்தது. இந்த மழை செஞ்சியில் 101 மி.மீ., பதிவானது. இந்த மழையினால் ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கி உள்ளது. இதுவரை காய்ந்து கிடந்த ஏரிகளில், குறைந்த அளவில் தண்ணீர் வந்துள்ளது. தொடர் மழை இருந்தால் ஏரிகளுக்கு மேலும் நீர்வருவதற்கான வாய்ப்பு உள்ளன. இந்த மழையினால் கிணறுகளின் நீர் மட்டம் ஓரளவிற்கு உயருவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

## ஏரியில் தண்ணீரை தேக்கி வைக்க விவசாயிகள் மனு

ஆத்தூர்: 'ஆத்தூர், புது ஏரியில் தண்ணீரை தேக்கி வைக்க நடவடிக்கை வேண்டும்' என, பாசன விவசாயிகள், பொதுப்பணித்துறை அலுவலர்களிடம் மனு அளித்தனர். ஆத்தூர் அருகே, தென்னங்குடிப்பாளையம் கிராமத்தில், ஆத்தூர் புது ஏரி உள்ளது. இந்த ஏரி மூலம், 400 ஏக்கர், பாசன வசதி பெறுகிறது. சமீபத்தில் பெய்த மழையால் ஏரிக்கு கணிசமான அளவில் தண்ணீர் வந்துள்ளது. ஆனால், தண்ணீர், ஏரிக்கு செல்லாமல் வசிஷ்ட நதிக்கு செல்லும் நீரோடைகளில் செல்கிறது. இதனால் ஏரியில் தண்ணீர் தேங்குவதில்லை. இந்நிலையில் ஏரியில் தண்ணீரை தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி, பாசன விவசாயிகள், ஆத்தூர் பொதுப்பணித்துறை அலுவலகத்தில், மனு அளித்தனர்.

### ரூ.2.50 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்: நாமக்கல்லில், நேற்று, 2.50 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உட்பட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 170 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,595 ரூபாய், குறைந்த பட்சம், 4,150 ரூபாய்க்கு ஏலம் போனது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு பயிற்சி

ஓசூர்: ஓசூர், ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையில் தானியம் சேமிப்பது குறித்த பயிற்சி நடந்தது. வேளாண்மை இயக்குனர் காளியப்பன் தலைமை வகித்தார். நெல், கம்பு,

சோளம், ராகி பயிர்களை, அறுவடை முதல் விற்பனை வரையிலும் தானிய இழப்பு இன்றி நவீன முறைப்படி பாதுகாப்பது, அவற்றை மதிப்புக் கூட்டுவதால் கிடைக்கும் கூடுதல் லாபம், 5 சதவீத குறைந்த வட்டிக்கு பொருட்கடன் பெறுதல், குளிர்பதன கிடங்கு வசதி உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விளை பொருட்களை பதப்படுத்துதல், சேமித்தல், மானிய வசதிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை, தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## விவசாய கிடங்கு திறப்பு

ஊட்டி: ஊட்டி அருகே டி.மணிஹட்டி கிராமத்தில், மலைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட விவசாய கிடங்கு, தண்ணீர் மேல்நிலை தொட்டி திறப்பு விழா, கோவில் மண்டபம் அடிக்கல் நாட்டு விழா நடந்தது.எம்.பி.,கோபாலகிருஷ்ணன், விவசாய கிடங்கை திறந்து வைத்து, புதிய கோவில் மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டினார்.ஊட்டி எம்.எல்.ஏ., புத்தி சந்திரன் மேல்நிலை குடிநீர் தொட்டியை திறந்து வைத்தார். ஊர் தலைவர் லட்சுமணன், ஊராட்சி ஒன்றிய தலைவர் சாந்தி, கக்குச்சி ஊராட்சி மன்ற தலைவர் விஜயசிவா, அ.தி.மு.க., ஊட்டி ஒன்றய செயலாளர் குமார், நகர செயலாளர் தேவராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

## பயறு வகை பயிருக்கு மானியம்

பழநி:பழநி பகுதியில் தற்சமயம் பயறுவகை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு டி.ஏ.பி., உரம் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட

உள்ளது. பழநி வேளாண் உதவிஇயக்குனர் சுருளியப்பன் தெரிவித்துள்ளதாவது: பழநி பகுதியில் பயறுவகை சாகுடி செய்துள்ள விவசாயிகள் பூக்கும் தருவாயில் இருவார இடைவெளி விட்டு டி.ஏ.பி., உரத்தினை 2 சதவீத கரைசலாக இலைவழியாக தெளிப்பதன் மூலம் அதிக பூக்களும், திரட்சியான மணிகளும் உற்பத்தியாகும். கூடுதல் மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு டி.ஏ.பி., உரம் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. மேலும் விபரங்களுக்கு விவசாயிகள் உங்கள் பகுதி வேளாண் அலுவலர், வட்டார உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம் என தெரித்துள்ளார்.

## வைகை அணையில் விரைவில் படகு சவாரி

ஆண்டிபட்டி:வைகை அணையில் பெடல் படகு சவாரி இன்னும் சில நாட்களில் துவங்கி விடும், என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், மத்திய அரசின் சுற்றுலா மேம்பாட்டுத்துறை சார்பில் ரூ.4.5 கோடி மதிப்பில் வைகை அணை பூங்கா மேம்படுத்தும் பணி சமீபத்தில் நடந்து முடிந்துள்ளது. வைகை அணையின் வலதுகரை, ரயில்வே பூங்கா அருகில் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் பெடல் படகு விடுவதற்கு குளம் அமைக்கப்பட்டுள்ளது. 60 மீட்டர் நீளத்திலும், 15 மீட்டர் அகலம், 1.5 மீட்டர் ஆழத்திலும் அமைக்கப்பட்டுள்ள இக்குளத்தில் தற்போது தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது.பெரியவர்களுக்கு 3 பெடல் படகுகளும், சிறியவர்களுக்காக 2 பெடல் படகுகளும் கொண்டு வரப்பட்டு, தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிந்து பல வாரங்கள் ஆகியும் இன்னும் துவக்க விழா நடக்கவில்லை. இதனால அணை பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்து செல்கின்றனர். இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில்,"வைகை அணையில் பெடல் படகுளில் சவாரி செய்வதற்கான கட்டணம், நேரம் நிர்ணயம்

செய்வது குறித்து இன்னும் சில நாட்களில் அரசின் ஒப்புதல் கிடைத்து விடும். படகு சவாரியை துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்,' என்றனர்.

**வேளாண் துறைக்காக தனி "வாட்ஸ்ஆப்'குழு உருவாக்கி தகவல்களை பகிருங்கள்: கலெக்டர் அறிவுரை**

தேனி:தேனி கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில், வேளாண் துறை, தோட்டக்கலை துறைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடந்தது. அதில் கலெக்டர் பேசுகையில், "வேளாண் உதவி அலுவலர்கள் வாரத்தில் 4 நாட்கள் கிராமங்களுக்கு சென்று, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். பயிர் சாகுபடி குறித்து இணை அடங்கல் பராமரித்து, சாகுபடி பயிர் விபரம், விவசாயிகளின் அலைபேசி எண்களை வைத்திருக்க வேண்டும்.

பெரியாறு பாசன பகுதியில் 2 ம் போக சாகுபடிக்கு குறுகிய கால ரகங்களை தேர்வு செய்து நாற்றாங்கால் தயாரிக்க வேண்டும். இயந்திர நடவு மேற்கொள்வதற்கான முன் ஏற்பாடுகளை செய்திட வேண்டும். சாகுபடி காலங்களில் உரம், பூச்சி மருந்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், தனியார் நிறுவனங்களில் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாகுபடிக்கு வட்டாரம் வாரியாக தண்ணீர் தேவை கேட்டறிந்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வேளண் துறைக்கென "வாட்ஸ் ஆப்' குழு அமைத்து அதில் வேளாண் உதவி அலுவலர் முதல் இணை இயக்குனர் வரை அனைவரையும் இணைத்து செய்திகளை பகிர்ந்து அதன்படி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

கூட்டத்தில் இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ரங்கநாதன், துணை இயக்குனர்கள் சங்கரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைவு**

மழை குறைந்ததன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்வரத்து, 20,970 கனஅடியிலிருந்து 12,544கனஅடியாக குறைந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70.78 அடியாகவும், நீர் இருப்பு 33.37 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

**அக்டோபர் 12 முதல் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தில் வரும் 12-ஆம் தேதி முதல் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், அக். 12-ஆம் தேதி முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையின் சில இடங்களில்

வெள்ளிக்கிழமை மிதமான மழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். வரும் அக். 12-ஆம் தேதியன்று வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் பல இடங்களில் பலத்த மழை பெய்யும். பிற மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்.

இந்த நிலையில், வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் திருவள்ளூர் மாவட்டம் திருவாலங்காட்டில் 120 மி.மீ. மழையும் செஞ்சியில் 100 மி.மீ. மழையும் பெய்துள்ளது. அரக்கோணத்தில் 70 மி.மீ. மழையும், குடவாசலில் 60 மி.மீ. மழையும் பெய்துள்ளது. இதேபோல, ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம், காவேரிப்பாக்கம், பூந்தமல்லி, பூண்டி (50 மி.மீ.), பள்ளிப்பட்டு, மாமல்லபுரம், செம்பரம்பாக்கம், திருச்சி, திருவள்ளூர், திருத்தணி (40 மி.மீ.), காஞ்சிபுரம், விராலிமலை, தாமரைப்பாக்கம் (30 மி.மீ.), சென்னை, துறையூர், நாகர்கோவில், புழல், குழித்துறை, வந்தவாசி, தேவாலா, கன்னியாகுமரி (20 மி.மீ.), கேளம்பாக்கம், சோழவரம், கீரனூர், மேட்டூர், செங்கல்பட்டு, வால்பாறை, திருப்பத்தூர், இரணியல், பெரம்பலூர் (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

### நெல் நடவு இயந்திரத்துக்கு வாடகை நிர்ணயம்: ஆட்சியர் அறிவிப்பு

நெல் நடவு இயந்திரத்துக்கு வாடகை நிர்ணயம் செய்து ஆட்சியர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

மாவட்டத்தில் தற்போது பரவலாக சம்பா பருவத்துக்கான நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. கடந்த சில நாள்களாக பெய்த மழையினால்

நாற்றங்காலில் விடப்பட்டிருந்த நாற்றுகள் நல்ல வளர்ச்சி அடைந்த நிலையில் அதனை வயலில் நடவு செய்யும் பணியும் ஆங்காங்கே தொடங்கியுள்ளன. இந்நிலையில், நெல் நடவு இயந்திரம் தட்டுப்பாடாக உள்ளதாகவும், இதனால் கூடுதல் வாடகை செலுத்த வேண்டியிருப்பதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இந்தப் புகார் தொடர்பாகவும், மாவட்டத்தில் நெல் நடவு இயந்திரத்தின் பயன்பாட்டினை அதிகரிக்கும் நோக்கத்தில் தனியார் நடவு இயந்திரங்களின் நடப்பு ஆண்டுக்கான வாடகை நிர்ணயம் செய்வது குறித்தான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமை வகித்தார். இதில் முன்னோடி விவசாயிகள் மற்றும் நெல் நடவு இயந்திர உரிமையாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நெல் நடவு இயந்திரத்தின் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதாக ஆட்சியர் தெரிவித்தார். அதன்படி, விவசாயிகள் நாற்றுகளை தயாரித்து அதனை நடவு மட்டுமே செய்வதற்கு நெல் நடவு இயந்திரத்தை இயக்குபவர் மற்றும் உதவியாள்களின் கூலி, இயந்திரத்துக்கான எரிபொருள் மற்றும் இயந்திர வாடகை உள்பட ஏக்கருக்கு 100 தட்டுகள் என்ற அடிப்படையில் அதிகபட்ச கட்டணமாக ரூ.2,400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாற்று தட்டு தயாரிப்பு, தட்டு வாடகை, ஆள் கூலி உள்பட ஒரு தட்டுக்கு அதிகபட்சம் ரூ.9 மட்டும் பெற வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகை கட்டணத்தில் நடவு இயந்திரங்களை அதன் உரிமையாளர்கள் இயக்க வேண்டும். எனவே விவசாயிகள் பெருமளவில் நெல்நடவு இயந்திரத்தினை பயன்படுத்தி நடவுப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென ஆட்சியர் தெரிவித்தார்.

**கரும்பு உற்பத்தியை பெருக்க நவீன தொழில்நுட்பம்: துணைவேந்தர்**

நவீன தொழில்நுட்பம் மூலம் தமிழகத்தில் கரும்பு உற்பத்தியை பெருக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) சி.ஆர்.ஆனந்தகுமார் தெரிவித்தார்.

மதுரை பசுமலையில் தமிழ்நாடு கரும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி யாளர்கள் 46 ஆவது கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் அவர் பேசியது:

கரும்பு உற்பத்தியில் உலக அளவில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் தமிழகம் நான்காம் இடத்தில் உள்ளது. மொத்தம் உற்பத்தியாகும் கரும்பில் 65-70 சதவீதம் வரை சர்க்கரை உற்பத்திக்காக பயன்படுகிறது. 20-25 சதவீதம் வெள்ளம் தயாரிப்பதற்காகவும், 7-10 சதவீதம் விதைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் பயிரிடப்படும் மொத்த பயிர்பரப்பில் 5.9 சதவீதம் கரும்பு பயிரிடப்படுகிறது. இதனை அறுவடை செய்ய நவீன இயந்திரங்களை கண்டறிந்து வருகிறோம். மேலும் உற்பத்தியைப் பெருக்க நவீன தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதில் நுண்ணீர் பாசன முறையில் குறைந்த அளவு நீரில் பயிர்செய்யப்படுகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு குறைந்த செலவும் அதிக வருவாயும் கிடைக்கிறது என்றார்.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் விழா மலரை வெளியிட்டு பேசியது:

சர்க்கரைத் துறையானது அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கூடியது. இந்த துறை வளர்ச்சி அடைந்தால் விவசாயிகள் மற்றும் ஆலை தொழிலாளர்கள் பயனடைவார்கள். இது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும். புதிய ஆராய்ச்சி மூலம் கரும்பு உற்பத்தி செலவை குறைத்து விவசாயிகள் மற்றும் ஆலை அதிபர்களுக்கு

லாபகரமான தொழிலாக கரும்பு உற்பத்தி தொழிலை மாற்றவேண்டும். விவசாயிகளின் வருமானத்தை பாதிக்ககூடியது களைகள். இவைகள் மூலம் சுமார் 20 சதவீதம் வரை உற்பத்தி பாதிக்கப்படும். இவற்றை கட்டுப்படுத்தவும் புதிய வழிமுறைகளை கண்டறிய வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் தேசிய கூட்டுறவு சர்க்கரை மேலாண்மை(மதுரை)இயக்குநர் எம்.சங்கரநாராயணன் வரவேற்றார். கோவை கரும்பு ஆராய்ச்சி நிலைய இயக்குநர் பக்சிராம் திட்டவிளக்க உரையாற்றினார். வேளாண்மைத்துறை இயக்குநர் மு.ராஜேந்திரன், சர்க்கரைதுறை கூடுதல் இயக்குநர் அ.சங்கரலிங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயக்குநர் மா.மகேஸ்வரன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் வி.ரவி ஆகியோர் சிறப்புரையாற்றினர். கரும்பு அபிவிருத்தி அலுவலர் ஆர். மணிமாறன் நன்றி கூறினார்.

### கொடைக்கானலில் பட்டர் புரூட்ஸ் விளைச்சல் அமோகம்

கொடைக்கானலில் விளைவிக்கப்படும் பட்டர் புரூட்ஸ் வெளிமாநிலங்களுக்கு அதிக அளவு ஏற்றுமதியாவதால் விவசாயிகள் தற்போது அதிகமாக சாகுபடி செய்து வருகின்றனர்.

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் கடந்த 15 ஆண்டுகளாக பட்டர் புரூட்(அவக்கோடா) என்ற பழம் குறுகிய காலங்களில் நன்கு விளைந்து அதிக லாபம் தருகிறது. மருத்துவ குணம் கொண்டாத கருதப்படும் இப்பழங்கள் தற்போது கொடைக்கானல் மற்றும் வடகவுஞ்சி, பண்ணைக்காடு, ஊத்து, வடகரைப்பாறை, செண்பகனூர், பிரகாசபுரம், அடுக்கம், பெருமாள்மலை உள்ளிட்ட பகுதிகளில் விளைவிக்கப்படுகிறது. சீசன் தொடங்கியுள்ளதால் அவை கேரளா, கர்நாடகா, கோவா ஆகிய மாநிலங்களுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இது குறித்து விவசாயிகள் கூறும் போது, அவக்கோடாவை ஊடுபயிராக பயிரிட்டு வருகிறோம். ஒரு பழம் 250 கிராம் முதல் 500 கிராம் வரை விளையும். விளை நிலங்களில் அவக்கோடா நாற்றுகளை நட்டு வைத்தால், குறைவான பராமரிப்புடன் நன்கு விளைந்து, அதிக லாபத்தை தரும். இதனால் இம்மரங்களை தற்போது அதிக அளவில் வளர்த்து வருகிறோம் என்றனர்.\ இது குறித்து தடியன்குடிசை தோட்டக்கலைத்துறை அலுவலர் ஒருவர் கூறும் போது, அவக்கோடா நாற்றை நட்டு 7 ஆண்டுகள் பராமரித்து வந்தால் ஆண்டு தோறும் இரண்டு முறை நல்ல மகசூல் கிடைக்கும். தற்போது கொடைக்கானலில் உள்ள எஸ்டேட்டுகளில் இவை அதிக அளவு நட்டு வளர்க்கப்படுகின்றன என்றார்.

## இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு கண்காட்சி

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வு கண்காட்சி வியாழக்கிழமை நடைபெற்றது. பெரியகுளம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய 4ஆம் ஆண்டு மாணவர்கள் நடத்திய இக்கண்காட்சிக்கு, பெரியகுளம் தோட்டக் கலை கல்லூரி முதல்வர் த.ந.பாலமுருகன் தலைமை வகித்தார். வத்தலகுண்டு தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் காயத்திரி, பாடத் திட்ட ஆசிரியர் ஆ.வேலுச்சாமி, மாணவர்கள் குழு ஆசிரியர் கே.சுரேஷ், முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கண்காட்சியில் பசுமைக் குடில், நிழல் வளாகக் கூடங்கள், மாடித் தோட்டம், மழைநீர் சேகரிப்பு, ஒருங்கிணைந்த வேளாண்மை, திசு வளர்ப்பு வாழை, கால்நடை மற்றும் தேனீ வளர்ப்பு, புதிய நவீன தொழில் நுட்பத்தில் விவசாய முறை, மண் இல்லா விவசாயம், செடி முருங்கை,

மருத்துவ குணம் உள்ள மூலிகைச் செடிகள் போன்ற மாதிரிகள் இடம் பெற்றிருந்தன.

## வெண்டைக்காய் விலை உயர்வு

பல்லடம், திருப்பூர் தினசரி சந்தைக்கு வெண்டைக்காய் வரத்து குறைந்துள்ளதால் அதன் விலை உயர்ந்துள்ளது.

நல்ல வடிகால் வசதியுடைய மணல் கலந்த செம்மண் நிலத்தில் வெண்டை நன்கு வளரும் தன்மையுடையது. இது நடவு செய்த ஒன்றரை மாதத்தில் காய்ப்புக்கு வரும். வைகாசி பட்டத்தில் நடவு செய்யப்பட்ட வெண்டை இதுவரை அறுவடை செய்யப்பட்டு வந்தது. கடந்த வாரம் வரை வரத்து அதிகமாக இருந்ததால் வெண்டை விலை கிலோ ரூ.10 ஆக இருந்தது. தற்போது சீசன் முடிவு பெற்றுள்ளதால் சந்தைக்கு வெண்டைக்காய் வரத்து குறையத் துவங்கியுள்ளது. இதன் காரணமாக தற்போது கிலோ ரூ.40-க்கு விற்பனையாகிறது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "ஆடி பட்டத்தில் நடவு செய்த வெண்டைக்காய்கள் அறுவடைக்கு வரும் போது விலை குறைய வாய்ப்புள்ளது' என்றனர்.

## சத்தியமங்கலத்தில் வனவிலங்கு வார விழா

வனவிலங்கு வார விழாவையொட்டி, சத்தியமங்கலத்தில் விழிப்புணர்வு பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

சத்தியமங்கலம் வனச்சரக அலுவலகத்தில் இருந்து துவங்கிய இப்பேரணியை மாவட்ட வன அலுவலர் கே.ராஜ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். வன உயிரின பாதுகாப்பை வலியுறுத்தி நடைபெற்ற இப்பேரணி மைசூர் சாலை, புதிய பாலம் வழியாக வாரச்சந்தையை சென்றடைந்தது.

இதில், சத்தி வனச்சரக அலுவலர் ஜான்சன், வனவர் கவிராஜ், வன ஊழியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஈரோடு சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரிப்பு

ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் மாடுகள் வரத்து அதிகரித்ததால் விற்பனை களைகட்டியது.

ஈரோடு, கருங்கல்பாளையத்தில் உள்ளி பிரசித்தி பெற்ற மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும். இச்சந்தைக்கு ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகளும் வந்து மாடுகளை வாங்கிச் செல்வர். புதன்கிழமை இரவு முதலே துவங்கிய மாட்டுச்சந்தைக்கு ஈரோடு, நாமக்கல், சேலம், திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் அதிக அளவில் மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

மாடுகளை வாங்கிச் செல்ல தமிழகம் மட்டுமின்றி கேரளம், ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்தனர். சந்தைக்கு, சுமார் 600 பசுக்களும், 500 எருமைகளும், 100-க்கும் மேற்பட்ட வளர்ப்புக் கன்றுகளும் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன.

பசுக்கள் ரூ. 15 ஆயிரம் முதல் ரூ. 35 ஆயிரம் வரையிலும், எருமைகள் ரூ. 16 ஆயிரம் முதல் ரூ. 36 ஆயிரம் வரையிலும் விற்பனையாகின. மாடுகளின் விலையில் மாற்றம் இல்லாதால் விற்பனை களைகட்டியது. இனிவரும் வாரங்களில் மாடுகளின் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்திப் பயிற்சி

மொடக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் துறை உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் சார்பில் மாவட்ட அளவில் விவசாயிகளுக்கு விதை உற்பத்திப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் மொடக்குறிச்சி வேளாண் அலுவலர் ஷியாம் சுந்தர் வரவேற்றார். வேளாண் துணை இயக்குநர் (விதை ஆய்வு) சி.அண்ணாதுரை தலைமை வகித்து, இயந்திர நாற்று நடவு குறித்து விளக்கமளித்தார்.

மொடக்குறிச்சி வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் கோமதி விதைகளின் முக்கியத்துவம், நெல் விதை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்துப் பேசினார். கோபி மைராடா மண்ணியல் வல்லுநர் சேகர் விதை நேர்த்தி குறித்துப் விளக்கினார். மொடக்குறிச்சி தோட்டக்கலை இயக்குநர் குணசேகரன் தோட்டக் கலை திட்டங்கள் குறித்தும், ஈரோடு உதவிப் பொறியாளர் மனோகரன் நவீன இயந்திரங்களின் பயன்பாடு குறித்தும் எடுத்துரைத்தனர். தொடர்ந்து, பொள்ளாச்சி வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் இயந்திர நாற்று நடவு குறித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேலும், விவசாயிகளுக்கு விதை நேர்த்திக்கான ஊட்டசத்து பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

பொள்ளாச்சி வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி மாணவர் விஷ்ணு நன்றி கூறினார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 21 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 21 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பு மற்றும் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையால் கடந்த இரு நாள்களாக

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. புதன்கிழமை நொடிக்கு 18,899 கன அடியாக வந்து கொண்டிருந்த நீர் வரத்து வியாழக்கிழமை காலை நொடிக்கு 20,970 கன அடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும், கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்துக்கும் நொடிக்கு 10,600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவைவிட, அணைக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், புதன்கிழமை காலை 69.57 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 70.60 அடியாக உயர்ந்தது.

அணையின் நீர் இருப்பு 33.21 டி.எம்.சியாக இருந்தது. தொடர்ந்து மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், காவிரி டெல்டா பாசனத்துக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி வரை தண்ணீர் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று காவிரி டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

### அரியலூரில் வடகிழக்குப் பருவமழை ஆலோசனைக் கூட்டம்

அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் ஆட்சியர் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் அனைத்து துறை அலுவலர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக தொடங்க வேண்டும். வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆற்றங்கரையோரப் பகுதிகள் ஆகியவற்றில் வசிக்கும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தீயணைப்புத்துறையினர் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து

பொதுமக்களை மீட்க தேவையான சாதனங்களை தயார் நிலையிலும், போதுமான அளவிலும் வைத்திருக்க வேண்டும்.

மேலும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் வடகிழக்கு பருவமழை காலங்களில் மழையின் காரணமாக சாலைகளில் மரங்கள், மின்கம்பங்கள் விழுந்தால் அவற்றை உடனடியாக அகற்றிடவும், பாலம் கட்டுதல் மற்றும் வெள்ளத்தினால் சாலைகள் பாதிக்கப்பட்டால் அதனை சீர் செய்திட தேவையான மணல் மூட்டைகள் மற்றும் சாக்குப்பைகளை கையிருப்பில் வைத்திருக்கவும், மாற்றுச்சாலையை கண்டறிந்தும் வைத்திருக்க வேண்டும்.நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் வெள்ளத்தினால் பாதிப்புகள் ஏற்பட்டால் பொதுமக்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் இதர அத்தியாவசிய உணவுப்பொருள்கள் வழங்க தேவையான அளவு கையிருப்பு வைத்திருக்க வேண்டும் என்றார் அவர்.

பின்னர், தீயணைப்பு துறை சார்பில் வெள்ளத்தில் சிக்கிக்கொள்ளும் பொதுமக்களை மீட்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. கூட்டத்தில், சிதம்பரம் மக்களவைத் தொகுதி உறுப்பினர் எம். சந்திரகாசி, மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) லலிதாவதி, வருவாய்த்துறை, வளர்ச்சித் துறை உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாணவிகளுக்கு சிறுதானிய மதிப்புக் கூட்டுப் பயிற்சி

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துனற சார்பில் கும்பகோணம் அருகேயுள்ள வண்ணக்குடி கிராமத்தில் சிறு தானிய மதிப்புக்கூட்டு பயிற்சி அண்மையில் நடத்தப்பட்ட்து.

இதில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்குகொண்டனர். பயிற்சியில் சிறுதானியங்களின் நன்மை, அதன் மதிப்பு கூட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியை கும்பகோணத்திலுள்ள பாரதி நேச்சுரல்ஸ் உரிமையாளர்கள் மணிகண்டன், நந்தகுமாரி, திருவிடைமருதூர் வேளாண் உதவி இயக்குநர் உதயக்குமார், தஞ்சாவூர் மாவட்ட துணை வேளாண் இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) மற்றும் அவ்வட்டார வேளாண் அலுவலர்கள் உதவியுடன் நடத்தினர்.

சிறுதானியத்தின் நன்மை குறித்து மணிகண்டன் கூறியது- அரிசி, கோதுமைக்கு மாற்றாக எதைச் சாப்பிடலாம் என்ற தேடலில் சர்வதேச அளவில் இன்று முன் நிற்பவை சிறு தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு, குதிரைவாலி ஆகியவை.

சிறுதானியங்களில் தாதுப்பொருட்கள், உயிர்ச்சத்து, நார்ச்சத்து குறைந்த அளவு கொழுப்பு சத்து மற்றும் உணவு சத்துகள், குறிப்பாக கால்சியம், இரும்புச் சத்து முதலியன பிற உணவு தானியங்களைவிட அதிகமாக உள்ளன.

இவை குளூட்டன் தன்மையற்ற ஒரு உணவு வகை என்பதால் எளிதில் செரிமானமாக வல்லது. எனவே இவை பெண்கள், குழந்தைகள், சர்க்கரை நோயாளிகள் முதலானோருக்கு சிறந்த உணவு.

மதிப்பு கூட்டுதலுக்காக சிறுதானியங்களில் இருந்து லட்டு, முறுக்கு, பணியாரம் முதலியன செய்யும் வழிமுறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் மாணவிகள் ஹேமலதா, கீர்த்தனா, கிருத்திகா, மஞ்சு, பிரபா, சாம்பவி,சரண்யா, சந்தியா, சுகன்யா, தாமரைச் செல்வி ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை பயிற்சி

பேராவூரணி வேளாண் கோட்டத்தைச் சேர்ந்த ஒட்டங்காடு ஊராட்சியில் இயற்கை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினரின் தத்தெடுப்பு கிராமமான ஒட்டங்காட்டில் ஒன்றியக்குழுத் தலைவர் சாந்திஅசோக்குமார் தலைமையில் தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் என். இளஞ்செழியன் முன்னிலையில் முகாம் நடைபெற்றது.

இதில் 50 விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் அவசியம், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகத்தில் அங்கக உரங்களின் பங்கு, இயற்கை வேளாண்மை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மோகன்தாஸ், பேராசிரியர் பாஸ்கர், உதவிப் பேராசிரியர்கள் ரமேஷ், ராஜா, பெங்களூர் இளநிலை அறிவியல் ஆராய்ச்சி அலுவலர் டாக்டர் சந்திரபிரபா ஆகியோர் அளித்தனர். ஏற்பாடுகளை வேளாண் அலுவலர்கள், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுரேஷ் உள்ளிட்டோர் செய்தனர். வேளாண் உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் நன்றி கூறினார்.

## 1,449 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்: ஆட்சியர்

விசுவக்குடி நீர்த் தேக்கத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 1,449.41 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், கல்லாற்றின் குறுக்கே பொதுப்பணித் துறை சார்பில் செம்மலை- பச்சமலையை இணைத்து விசுவக்குடி நீர்த்தேக்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது, தொடர்ந்து பெய்து வரும் மழையால் விசுவக்குடி அணைக்கு நீர்வரத்து வரத்தொடங்கியுள்ளது.

அணைக்கு வந்துள்ள நீரின் அளவை வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் மேலும் பேசியது:

இந்த நீர்த்தேக்கம் மூலம் கல்லாற்று நீர் வீணாகாமல் தடுத்து, விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்கு பயன்படுத்தும் வகையில் முதல்கட்ட பணியாக ரூ. 19 கோடியில் 665 மீட்டர் நீளமுள்ள கரையுடன் கூடிய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த அணைக்கட்டு மூலம் 30.67 மில்லியன் கன அடி தண்ணீரை, 10 மீட்டர் ஆழத்துக்கு சேமிக்க இயலும். இதற்காக அணையில் நீர்ப்போக்கி அமைக்க 11 மீட்டர் உயரத்துக்கு கான்கிரீட்டால் ஆன கட்டுமானம் அமைக்கப்பட்டுள்ளது. நீர்போக்கியின் இருபுறமும், மலையுடன் இணைக்கும் வகையில் 12 மீட்டர் உயரத்துக்கு கரைகள் அமைக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்படாதபடி கருங்கல் பதிக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்காக 2 ஆம் கட்டமாக மறு மதிப்பீட்டின் படி ரூ. 14.7 கோடி நிதி பெறப்பட்டது. நீர்த்தேக்கம் மூலம் நேரடியாக 859 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதிபெறும். மேலும், மதகுகளின் மூலம் வெங்கலம் பெரிய ஏரிக்கு கீழுள்ள சுமார் 421.41 ஏக்கர் ஆயக்கட்டிற்கான நீராதாரம் உறுதி செய்யப்படும். நிலத்தடிநீர் செறிவூட்டப்படுவதால் கிணற்றுப் பாசனம் மூலம் கூடுதலாக 169 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மறைமுகமாக 2 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். இந்த அணையை அன்னமங்கலம் வழியாக சென்று பார்ப்பதற்காக விசுவக்குடியிலிருந்து 1.20 கி.மீ., நீளத்துக்கு சாலை அமைக்கப்பட்டு வருகிறது. அணையின் திட்டப் பணிகளின்படி தேக்கப்பட உள்ள 30.67 மில்லியன் கன அடி நீருடன், உள்பகுதியில் ஆழப்படுத்துவதன் மூலம், 10 மில்லியன் கன அடி நீரை சேமிக்க மாவட்ட ஆட்சியரின் சமச்சீர் வளர்ச்சி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர்த்தேக்கத்தை பெரம்பலூர் மாவட்டத்தின் பிரதான சுற்றுலாத் தலமாக உருவாக்கும் வகையில், அணையின் எதிரே பூங்காவும், கரையில்

பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகையும், அணையைப் பார்க்க பொது மக்கள் வரும் வகையில் தொண்டமாந்துறை வழியாக புதிதாக சாலை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலம் 1,449.41 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார் அவர்.

ஆய்வின்போது, பொதுப்பணித் துறை நீர்வள உதவிப் பொறியாளர் கார்த்திக் உடனிருந்தார்.

**கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முகாம்**

பெரம்பலூர் மாவட்டம் அனுக்கூர் அருகேயுள்ள குடிகாடு கிராமத்தில் ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவிகள் சார்பில் கால்நடை பராமரிப்பு மற்றும் சமச்சீர் கால்நடை தீவனத் திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமுக்கு தலைமை வகித்து, குடிகாடு கால்நடை மருத்துவர் அன்பழகன் பேசியது: சமச்சீர் தீவனத்தால் கால்நடைகளின் நலமும், உற்பத்தியும் பெருகுகிறது.

உள்ளூரில் கிடைக்கும் தீவனங்களை சமச்சீர் செய்து புரதம், எரிசக்தி, உயிர் சத்துகள் போன்றவற்றை சரியான அளவில் கால்நடைகளுக்கு அளித்து, பாலின உற்பத்தியை பெருக்குவதே சமச்சீர் கால்நடை தீவனத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், மாடுகளுக்கு சமச்சீர் செய்யப்பட்ட கலப்பு தீவனம் அளித்தால் அவற்றின் வளர்ச்சியும், பால் உற்பத்தியும் அதிகரிக்கும்.

தீவனத்தில் தாது உப்புகளை சேர்ப்பதால் கன்றுகளின் வளர்ச்சி மற்றும் செரிமானத்திற்கு உதவுகிறது. மேலும், தாது உப்புகள் இனப் பெருக்கத் திறனை அதிகரிப்பதோடு, நோய் எதிர்ப்பு திறனையும் அதிகரிக்க செய்கிறது என்றார் அவர்.

ஆவின் விரிவாக்க அலுவலர் அம்பேத்கார், குடிகாடு பால் கூட்டுறவு சங்க செயலர் செங்கமலை உள்பட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கிராம தங்கல் திட்டத்தின் கீழ் ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவிகள் செய்திருந்தனர்.

### குமரியில் மழை நீடிப்பு: பாசனத்துக்கு தண்ணீர் குறைப்பு

குமரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளிலிருந்து பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீர் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் ஓரிரு நாள் இடைவெளிக்குப் பின்னர் அணைப் பகுதிகள் உள்பட அனைத்துப் பகுதிகளிலும் இடைவிடாது சாரல் மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை இந்த மழை இரவுவரை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. மேலும், ஆறுகளிலும் அதிகளவில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

அணைகளில் நீர்மட்டம்: வியாழக்கிழமை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் 34.85 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 872 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 557 கன அடி நீர் பாசனத்துக்காக சென்றுகொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 65.80 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 153 கன அடி நீர்வரத்து இருந்தது. சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 14.07 அடி, சிற்றாறு 2 அணை 14.17 அடி, பொய்கை அணை 8.50 அடி, மாம்பழத்துறையாறு அணை 46.92 அடியாகவும் இருந்தது. இதில், பேச்சிப்பாறை அணையைத் தவிர இதர அணைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. மாவட்டத்தில் அதிகபட்சமாக மயிலாடியில் 43.02

மி.மீட்டரும், கொட்டாரத்தில் 27 மி.மீட்டரும் மழையளவு பதிவாகியிருந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## முல்லைப்பெரியாறு அணை பகுதியின் எல்லையை வரையறுக்கவேண்டும் பசுமை தீர்ப்பாயத்தில், தமிழக அரசு மனு தாக்கல்



சென்னை,

முல்லைப்பெரியாறு அணை பகுதியில் வாகன நிறுத்தம் கட்டும் விவகாரத்தில், அணையின் எல்லைப்பகுதியை வரையறுக்கவேண்டும் என்று பசுமை தீர்ப்பாயத்தில், தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

வனவிலங்குகளுக்கு பாதிப்பு

முல்லைப்பெரியாறு அணைக்கட்டு பகுதியில் வாகன நிறுத்தத்தைக் கட்டுவதற்கு கேரள அரசு நடவடிக்கை எடுத்தது. இதை எதிர்த்து சென்னையில் உள்ள தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில்,

கேரளாவைச் சேர்ந்த தங்கப்பன், ஆபிரகாம் ஆகியோர் வழக்கு தாக்கல் செய்தனர். தமிழக அரசும் இந்த வழக்கில் இணைந்துள்ளது. அந்த இடம் தேக்கடி வனப்பகுதியில் வருகிறது என்றும், அங்கு 'கார் பார்க்கிங்' அமைத்தால், வனவிலங்குகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படும் என்றும் மனுவில் கூறப்பட்டு இருந்தது.

## இடைக்கால தடை

தமிழக அரசின் பொதுப்பணித்துறைச் செயலாளர் தாக்கல் செய்த மனுவில், 'கார் பார்க்கிங்' கட்ட தேர்வு செய்துள்ள இடம், தமிழக அரசுக்கு சொந்தமான வனப்பகுதி என்பதோடு, அந்த இடம் முல்லைப்பெரியாறு அணையின் நீர் பிடிப்பு பகுதியாகவும் உள்ளது. எனவே சுற்றுப்புறசூழலுக்கு பாதிப்பு வரக்கூடும் என்பதால் 'கார் பார்க்கிங்' கட்டுவதற்கு தடை விதிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கை தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உறுப்பினர்கள் நீதிபதி சொக்கலிங்கம், பேராசிரியர் நாகேந்திரன் விசாரிக்கின்றனர். வாகன நிறுத்தம் அமைக்கும் பணியை மேற்கொள்ள கேரளா அரசுக்கு இடைக்கால தடை விதித்து ஏற்கனவே உத்தரவிட்டிருந்தனர்.

## நிபுணர் குழு அமைப்பு

அதோடு, பிரச்சினைக்கு உரிய அந்த இடம், நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ளதா?, வனத்துறையின் கட்டுப்பாட்டில் வருகிறதா?, காப்புக்காடாக உள்ளதா? என்பதை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்காக மத்திய நில அளவைத்துறை மற்றும் மத்திய வனத்துறையைச் சேர்ந்த தலா ஒரு நிபுணர் அடங்கிய குழுவை அமைத்து உத்தரவிட்டனர். சம்பந்தப்பட்ட இடத்துக்கு சென்று ஆய்வு செய்வதற்கான செலவுத் தொகையை தமிழகம் மற்றும் கேரளா அரசுகள் வழங்கவேண்டும் என்றும் ஆணை பிறப்பித்திருந்தனர்.

தமிழக அரசு மனு தாக்கல்

இந்த நிலையில், நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் 2 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், முல்லைப்பெரியாறு நீர்ப்படிப்பு பகுதி எவ்வளவு உள்ளது?, அதன் எல்லை எது? என்பதையெல்லாம் வரையறை செய்ய நிபுணர் குழுவுக்கு உத்தரவிட வேண்டும். மேலும், ஏற்கனவே விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கவேண்டும் என்ற கேரளா அரசின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.அதைத்தொடர்ந்து இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை நவம்பர் 4-ந்தேதிக்கு தீர்ப்பாய உறுப்பினர்கள் தள்ளிவைத்தனர்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 16 ஆயிரம் கனஅடியாக குறைந்தது அருவிகளில் குளிக்க தொடர்ந்து தடை



பென்னாகரம்,

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாக

குறைந்தது. இருப்பினும் அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது.

கனமழை

தமிழக-கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்தது. இதனால் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இந்த தண்ணீர் தமிழக- கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல்லை வந்தடைந்தது. நீர்வரத்து அதிகரித்ததால் ஒகேனக்கல் பிரதான அருவி, ஐந்தருவிகள், சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து நுங்கும், நுரையுடன் கொட்டியது. மேலும் காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

காவிரி ஆற்றில் வினாடிக்கு 23 ஆயிரத்து 40 கனஅடியாக வந்து கொண்டு இருந்த தண்ணீர் நேற்று காலை முதல் படிப்படியாக குறையத்தொடங்கியது. நேற்று மாலை 5 மணி நிலவரப்படி வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. நீர்வரத்து குறைந்ததால் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு கீழ் தண்ணீர் செல்கிறது. இருப்பினும் ஒகேனக்கல் பிரதான அருவிக்கு செல்லும் நடைபாதை நுழைவாயிலை பூட்டி போலீசார், தீயணைப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து தடை

மேலும் போலீசார், வருவாய்த்துறையினர், தீயணைப்பு படையினர், ஊர்க்காவல் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால் கலெக்டர் விவேகானந்தன் அருவிகளில் குளிக்க தடை விதித்தார். இந்த தடை உத்தரவு தொடர்ந்து அமலில் இருந்து வருகிறது.இந்தநிலையில் நேற்று ஒகேனக்கல்லுக்கு

வந்த சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க விடாததால் ஏமாற்றம் அடைந்தனர். அவர்கள் கரைபுரண்டு ஓடிய காவிரி ஆறு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை கண்டு ரசித்தனர். பிலிகுண்டுலுவில் காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்தை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

## அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நடைபெற்றது



அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் கலெக்டர் சரவணவேல் ராஜ் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டம்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

வடகிழக்கு பருவமழை

அரியலூர் மாவட்டத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து கனமழையாக மாறிட வாய்ப்பு உள்ளதால் அனைத்து துறை அலுவலர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக வருவாய்துறையின் சார்பில் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆளுகைக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழும் அபாயகரமான பகுதிகள் மற்றும் வெள்ள பெருக்கு ஏற்படும் ஆற்று பகுதிகள் ஆகியவற்றை முன்கூட்டியே அறிந்து கொண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்படும் நபர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க முன்னேற்பாடு செய்ய வேண்டும். காவல்துறையின் சார்பில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையினை உணர்ந்து தகவல் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தீயணைப்பு சாதனங்கள்

தீயணைப்புத்துறையின் சார்பில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து பொதுமக்களை மீட்க தீயணைப்பு சாதனங்களை தேவையான அளவிற்கு வைத்திருக்கவும், எந்த நேரத்திலும் மீட்டு பணியில் ஈடுபட தயார் நிலையிலும் இருக்க வேண்டும். பொதுப்பணித்துறையின் சார்பில் மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு தண்ணீர் உள்ளே, வெளியே செல்லும் பாதைகளில் அடைப்புகள் இருந்தால் அவற்றை உடனடியாக அகற்றுமாறும், மழை மற்றும் புயல் காலங்களில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு மின்சாரவசதி, குடிநீர் வசதி மற்றும் பிற வசதிகள் இருப்பதை உறுதி செய்து கொண்டு புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் சாலைகளில் மரங்கள், மின்கம்பங்கள் விழுந்தால் அவற்றை உடனடியாக அகற்றிடவும், பாலம் கட்டுதல் மற்றும் வெள்ளத்தினால் சாலைகள் பாதிக்கப்பட்டால் அதனை சீர் செய்திட தேவையான மணல் மூட்டைகள் மற்றும் சாக்குபைகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் பொதுமக்களுக்கு அரிசி, மண்எண்ணெய் இதர அத்தியாவசிய உணவுப்பொருட்கள் வழங்க தேவையான அளவு கையிருப்பு வைத்திருக்க வேண்டும். எனவே, வருகின்ற வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அனைத்து துறையினரும் கருத்து வேறுபாடின்றி ஒருங்கிணைந்து, துயர்துடைப்பு மற்றும் மீட்டுப்பணிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாமல் பணிபுரிய வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.பின்னர் தீயணைப்பு துறையின் சார்பில் மழைக்காலங்களில் வெள்ளத்தில் சிக்கிக்கொள்ளும் பொதுமக்களை மீட்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட கலெக்டர் பார்வையிட்¢டார்.

அதிகாரிகள்

கூட்டத்தில் சந்திரகாசி எம்.பி., மாவட்ட வருவாய் அலுவலர் ரவீந்திரன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) லலீதாவதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், வருவாய்துறை, வளர்ச்சிதுறை, வேளாண்மைத்துறை, சுகாதாரத்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நுகர்பொருள் வாணிப கழகம், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் கல்வித்துறை ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பயிர் பட்ஜெட் முறையை அமல்படுத்த வேண்டும் விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தல்




மத்திய, மாநில அரசுகள் பயிர் பட்ஜெட் முறையை அமல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்துக்கு கூட்டமைப்பின் செயலாளர் வக்கீல் நல்லசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் பாலசுப்பிரமணியம், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், இந்தியாவில் இருந்து விளைபொருட்களை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்க வேண்டும். தக்காளி, வெங்காயம் போன்ற பொருட்கள் சிலநேரங்களில் கிலோ ரூ.1-க்கும், சில நேரங்களில் கிலோ ரூ.100-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் நஷ்டம் அடைகின்றனர்.

பயிர் பட்ஜெட்

நாடு முழுவதும் உணவு பயிர்கள் சாகுபடி குறித்து அரசிடம் சரியான புள்ளிவிவரங்கள் இல்லை. இதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு உணவு பயிர் தேவை, எவ்வளவு பயிரிடப்பட்டு உள்ளது என்பது குறித்த விவரம் அரசிடம் இல்லாததால் விலை உயர்வையும், விலை சரிவையும் கட்டுப்படுத்த முடியவில்லை. வளர்ந்த நாடுகளை போல அரசிடம் விளக்கமான பயிர் சாகுபடி பரப்பு குறித்த ஒதுக்கீட்டை சமர்ப்பித்து, அதன்படி பயிரிட்டால் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் இழப்பு இல்லாமல் பொருட்களின் விலையை நிர்ணயிக்க முடியும். எனவே மத்திய, மாநில அரசுகள் பயிர் பட்ஜெட் முறையை அமல்படுத்த வேண்டும்.

வேளாண் விளை பொருட்களுக்கான விலையை நிர்ணயம் செய்ய அரசால் நியமிக்கப்பட்ட சாமிநாதன் தலைமையிலான குழு, பயிர் சாகுபடி செலவை கணக்கிட்டு, செலவில் சரிபாதியை சேர்த்து விளை பொருட்களுக்கான விலையை நிர்ணயிக்க வேண்டும் என கடந்த 2005-ம் ஆண்டு அரசுக்கு பரிந்துரை செய்தது. இதற்காக அரசு நிர்வகித்து வரும் விவசாய மற்றும் தோட்டக்கலை பண்ணைகளில் சரிபாதியை வணிக நோக்கத்தில் நடத்த வேண்டும்.

அடிப்படை விலை நிர்ணயம்

வேளாண் பட்டதாரிகள் மூலம் தேவையான தொழிலாளர்களை அமர்த்தி அவர்களுக்கு முறையான சம்பளம் வழங்கி, உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவற்றை பயன்படுத்தி பயிர் விளைவித்தால் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ஆகும் செலவு, ஒரு டன் கரும்பு உற்பத்தி செலவு, ஒரு லிட்டர் பால் உற்பத்தி செலவு போன்றவற்றை கணக்கிட்டு சாகுபடி செலவுடன் அதில் சரிபாதியை லாபமாக வைத்து, விளைபொருட்களுக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்து அரசு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் அதன்பிறகு விவசாயிகளுக்கு மானியமோ, இலவசமோ, கடனோ, தள்ளுபடியோ, இதர சலுகைகளோ தர வேண்டியது இல்லை என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பொள்ளாச்சி பகுதியில் கொடி ரக தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்



பொள்ளாச்சி,

பொள்ளாச்சி பகுதியில் கொடி ரக தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>தக்காளி சாகுபடி</u>

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் 38.80 ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டு உள்ளது. இதில் அதிகமாக கொடி ரக தக்காளி சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. தக்காளியில் கொடி ரகத்தை பொருத்த வரை நாற்று தயாரித்து நடவு செய்ய வேண்டும். மேட்டுப்பாத்தி குழித்தட்டு முறையில் நாற்று தயாரிக்கலாம்.

நாற்றுப்பருவம் 25 முதல் 30 நாட்கள் ஆகும். பின்னர் நாற்றை பாத்திக்கு பாத்தி 3 அடி இடைவெளியும், செடிக்கு செடி 2 அடியிலும் நடவு செய்ய வேண்டும். நடவுக்கு பின்னர் தினமும் ஒரு மணி நேரம் நீரில் பாசனம் செய்ய வேண்டும்.

மழைக்கு சேதமடையாது

நடவு செய்த 30–வது நாளில் சவுக்கு அல்லது தைல மரக்குச்சிகளை 6 அடி இடைவெளியில் நட்டு வைத்து தக்காளி கொடியை சணல் கயிறு கொண்டு கட்டி விட வேண்டும். நடவு செய்த 30 மற்றும் 60 நாளில் களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

நடவு செய்ததில் இருந்து 70–வது நாளில் காய்க்க தொடங்கும். அதை தொடர்ந்து 150 நாட்கள் வரை தக்காளி அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 45 முதல் 50 டன் வரை மகசூல் எடுக்க முடியும். கொடி ரக தக்காளி சாகுபடி செய்வதால், மழைக்காலங்களில் தக்காளி செடி தரையில் விழுந்து, பழங்கள் சேதமடையாது. எனவே இந்த கொடி ரக தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இந்த தகவலை பொள்ளாச்சி வடக்கு தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) சகாப்தீன் தெரிவித்தார்.

## கூடலூரில் உள்ள கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனை காலாவதியான பொருட்கள் பறிமுதல்



கூடலூர்,

கூடலூரில் உள்ள கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனை நடத்தி காலாவதியான பொருட்களை பறிமுதல் செய்து அழித்தனர்.

காலாவதியான பொருட்கள் விற்பனை

கூடலூர் பகுதியில் உள்ள வணிக நிறுவனங்களில் காலாவதியான உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக உணவு பாதுகாப்பு துறையினருக்கு பல்வேறு புகார்கள் வந்தன. இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் பந்தலூர் பகுதியில் உணவு பாதுகாப்பு மாவட்ட அதிகாரி டாக்டர் ரவி தலைமையிலான அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி காலாவதியான பொருட்களை பறிமுதல் செய்து அழித்தனர். மேலும் அந்த பொருட்களை வைத்திருந்த கடை உரிமையாளர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினர்.

இந்த நிலையில் கூடலூர் நகரில் நேற்று உணவு பாதுகாப்பு மாவட்ட அதிகாரி டாக்டர் ரவி மேற்பார்வையில் சிவராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் புதிய மற்றும் பழைய பஸ் நிலையம் பகுதியில் உள்ள கடைகளில் சோதனை நடத்தினர்.

பொதுமக்கள் புறக்கணிக்க வேண்டும்

அப்போது சில பேக்கரி கடைகளில் காலாவதியான பிஸ்கெட் பாக்கெட்டுகள், குளிர்பானங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதை உணவு பாதுகாப்பு துறையினர் பறிமுதல் செய்து அழித்தனர். இதேபோல் மற்ற கடைகளிலும் அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள்.

இது குறித்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் கூறுகையில், கடைகளில் வாங்கும் பொருட்களின் தன்மை, தரம், பொருட்களை பேக்கிங் செய்த தேதி உள்ளிட்ட விவரங்களை சரி பார்த்த பின்னரே மிக விழிப்போடு பொதுமக்கள் வாங்க வேண்டும். மேலும் மனித உடலுக்கு கேடு விளைவிக்கும் காலாவதியான பொருட்களை வணிக நிறுவனங்கள் வழங்கினால் அதை பொதுமக்கள் வாங்காமல் புறக்கணிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் காலாவதியான பொருட்கள் விற்பனை கட்டுக்குள் வரும் என்று தெரிவித்தனர்.

## நோய் தாக்காமல் இருக்க கேரட் செடிகளுக்கு மருந்து அடிக்கும் பணி தீவிரம்



கொலக்கம்பை,

கேரட் செடிகளை நோய் தாக்காமல் இருக்க மருந்து அடிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>காய்கறி சாகுபடி</u>

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. கேரட், முட்டைக்கோஸ், உருளைக்கிழக்கு போன்றவற்றை அதிகளவில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்த நிலையில் மாவட்டத்தில் குன்னூர், கோத்தகிரி, கொலக்கம்பை, ஊட்டி உள்பட பல்வேறு இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வந்தது.

இந்த மழை காய்கறி விவசாயத்துக்கு பயனுள்ளதாக அமைந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனாலும் தாழ்வான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியதால் கேரட் செடிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் செடிகளை நோய்கள் தாக்கும் நிலை உள்ளது. இதை தவிர்க்க விவசாயிகள் கேரட் செடிகளுக்கு மருந்து அடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

நல்ல மழை

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

நீலகிரியில் கடந்த வாரங்களில் நல்ல மழை பெய்தது. இந்த வாரம் தொடக்கம் முதல் வெயில் அடித்து வருகிறது. மழையினால் கேரட் செடிகள் நன்கு வளரத்தொடங்கி உள்ளன. ஆனால் செடிகள் வேகமாக வளர்ந்தால், மண்ணுக்கு அடியில் உள்ள கேரட் வளராது. இதனால் எடை குறைவு ஏற்படும் நிலை உள்ளது. இதை தடுத்து மகசூல் அதிகரிக்கவும், மழையால் செடிகளை நோய் தாக்காமல் இருக்கவும் மருந்து தெளிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதன் மூலம் இன்னும் சில வாரங்களில் கேரட்டுகள் அறுவடைக்கு தயாராகி விடும். இதனை மேட்டுப்பாளையத்தில் உள்ள விற்பனை மண்டிக்கு விற்க கொண்டு செல்ல உள்ளோம். தற்போது ஒரு கிலோ கேரட் சராசரியாக ரூ.30–க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**பெரம்பலூரில் தொடர் மழையால் ஏரி-குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாய பணிகள் தீவிரம்**



பெரம்பலூரில் தொடர் மழையால் ஏரி-குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் விவசாய பணிகள் தீவிரமடைந்தது.

பலத்த மழை

பெரம்பலூர் நகரிலும், மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளிலும் கடந்த 10 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. பகலில் வெயில் கடுமையாக உள்ளது. மாலை நேரத்தில் இதமான தட்பவெப்பநிலையும், அதனைத்தொடர்ந்து இரவு நேரத்தில் பலத்தமழையும் பெய்துவருகிறது.

நீர்வரத்து அதிகரிப்பு

ஓடைகள், நீர்வரத்து வாய்க்கால்களின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளில் மழைநீர் நிரம்பி உள்ளது. பெரம்பலூர் புறநகரில் உள்ள பெரம்பலூர் நகருக்கு குடிநீர் வழங்கும் 6 கிணறுகள் அமைந்துள்ள உப்புஓடை நிரம்பி வருகிறது. செட்டிக்குளம், செஞ்சேரி, குரும்பலூர்,

பாளையம் பகுதிகளில் உள்ள குளங்கள், நீர்நிலைகளும் நிரம்பி வழிகிறது. வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக பெரம்பலூர் மாவட்டத்தில் மழைபெய்துவருவதால் விவசாயிகள் தங்களது வயல்களில் உழவாரப்பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர். மேலும் பெரம்பலூர் நகரில் கடந்த 5 ஆண்டுகளாக நிலவி வந்த கடும் வறட்சி நிலை மாறிஉள்ளது. ஆழ்துளை கிணறுகளின் ஊற்று அதிகரிப்பால் பொதுமக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டில் இருந்து சற்றே விடுபட்டுள்ளனர்.

மழையளவு விவரம்

நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவான மழைஅளவு விவரம்: பெரம்பலூர்- 57மி.மீ, வேப்பந்தட்டை- 33மி.மீ, தழுதாழை- 57 மி.மீ. பாடாலூர்- 3மி.மீ,செட்டிக்குளம்- 1 மி.மீ, மொத்தம்- 151 மி.மீ. சராசரியாக 30.2 மி.மீ. மழை பெய்துள்ளது.

## கருங்கல்பாளையம் சந்தையில் எருமை மாடு ஒன்று ரூ.34 ஆயிரத்துக்கு விற்பனை

ஈரோடு,

கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் எருமை மாடு ஒன்று ரூ.34 ஆயிரத்துக்கு நேற்று விற்பனை ஆனது.

மாட்டுச்சந்தை



ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள மாட்டுச்சந்தை வாரந்தோறும் புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய 2 நாட்கள் நடந்து வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் மாட்டுச்சந்தை நடந்தது. இதில் 200 வளர்ப்பு கன்று குட்டிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இவற்றை பல்வேறு இடங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் பிடித்து சென்றனர்.

நேற்று வழக்கமான சந்தை நடந்தது. இதற்கு நேற்று முன்தினம் இரவே விவசாயிகள் தங்களது மாடுகளை வாகனங்களில் கொண்டு வரத்தொடங்கினார்கள். சேலம், கம்பம், மதுரை, தேனி, கோவை, கரூர், திருப்பூர், நாமக்கல், ஈரோடு போன்ற பகுதிகளில் இருந்து மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன.

<u>ரூ.34 ஆயிரம்...</u>

450 எருமை மாடுகள், 500 பசுமாடுகள் என மொத்தம் 950 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் எருமை மாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.16 ஆயிரத்துக்கும், அதிகபட்ச

விலையாக ரூ.34 ஆயிரத்துக்கும் விற்பனையானது. பசுமாடு ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.16 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.32 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும், மராட்டியம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, கோவா போன்ற வெளி மாநிலங்களில் இருந்தும் மாட்டுச்சந்தைக்கு ஏராளமான வியாபாரிகள் வந்து இருந்தனர். வியாபாரிகள் மாடுகளை விலைக்கு பிடித்து லாரிகள் மற்றும் சரக்கு வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

தினகரன்

**வங்கக் கடலில் காற்றழுத்தம்: தமிழகத்தில் கனமழை பெய்யும்**



சென்னை: தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வெப்ப சலனம் நிலவுகிறது. இதனால், வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டு மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று தமிழகத்தில் திருவாலங்காட்டில் 120 மிமீ மழை பெய்துள்ளது. வெப்ப சலனம் தொடர்ந்து நீடிக்கிறது. அத்துடன் வங்கக் கடலில் வட கிழக்கு பகுதியில்

குறைந்த காற்றழுத்தம் உருவாகியுள்ளது. அது மேற்கு திசையில் நகர்ந்து வருவதால் தமிழகத்தில் கனமழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது தவிர தென் மேற்கு பருவமழையும் கேரளாவில் தீவிரம் அடைந்துள்ளதால் தென் மாவட்டங்களிலும் கனமழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

**இயந்திர நெல் நடவு பணி தீவிரம்**

ஜீயபுரம், : அந்தநல்லூர் வட்டாரத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதுகுறித்து அந்தநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராஜேஸ்வரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: அந்தநல்லூர் வட்டாரத்தில் நடப்பு பருவத்தில் சுமார் 3,000 ஹெக்டேரில் சம்பா சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது கிடைத்துள்ள குறைந்த அளவு தண்ணீரைக்கொண்டு விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். பருவ நிலையில் மற்றும் போதிய ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சூழலில் நெல் நடவுப்பணியை இயந்திரம் மூலம் விவசாயிகள் மேற்கொள்ளலாம். இதற்காக ஒரு ஏக்கருக்கு சுமார் 15 கிலோ விதை போதுமானது. நாற்றங்காலில் 5அடி அகலம் 30அடி நீளத்திற்கு சேற்றைக்கொண்டு மேட்டுப்பாத்தி அமைத்து விதைக்க வேண்டும். 15 நாட்களில் சுமார் 15 முதல் 18 செ.மீ. உயரத்திற்கு வளர்ந்துள்ள நாற்றை எடுத்து இயந்திரத்தின் மூலம் நடவு செய்ய முடியும். இதற்காக ஒரு ஹெக்டேருக்கு அரசு மானியமாக ரூ.3,500ஐ வேளாண்துறை வழங்குகிறது. களை எடுப்பது, உரமிடுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள ஏதுவான இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணி தற்போது வசதியாக வரிசை நடவு தற்போது அந்தநல்லூர் வட்டாரத்தில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் இயந்திரம் மூலம் நடவு செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார்.

**உருளைக்கிழங்கு அறுவடை தீவிரம்**

ஊட்டி, : நீலகிரியில் தற்போது மழை பெய்து வரும் நிலையில், உருளைக்கிழங்கு அழுகிவிடாமல் இருக்க முன்னதாகவே அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அதிகப்படியாக பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் நாள் தோறும் மழை பெய்து வருகிறது. இதனால், பெரும்பாலான பகுதிகளில் பரியிடப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ள காய்கறிகளை சற்று முன்னதாகவே அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மழைக் காலங்களில் உருளைக்கிழங்கு அறுவடை செய்தால், அதனுடன் அதிகளவு மண்ணும் சேர்ந்து வந்து விடும். இதன் காரணமாக, விலை குறையும்.

எனவே, விவசாயிகள் மழை தீவிரமடைவதற்கு முன் உருளைக்கிழங்குகளை அறுவடை செய்யும் பணிகளில் மாவட்டம் முழுவதுமே ஈடுபட்டுள்ளனர். ஊட்டி அருகேயுள்ள கோடப்பமந்து பகுதியில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்குகளை அறுவடை செய்யும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

**மலைப்பகுதியில் தொடர் கனமழை வரட்டுப்பள்ளம் அணை நீர்மட்டம் உயர்வு**

அந்தியூர், :அந்தியூரை அடுத்துள்ள வரட்டுப்பள்ளம் அணை, 33.5 அடி உயரமும், 1798 மீட்டர் நீளமும் 139.6 மிள்ளியன் கன அடி கொள்ளவும் கொண்டது. இந்த அணைக்கு பர்கூர், தாமரைக்கரை, தாளக்கரை, தேவர்மலை, மடம் ஆகிய வனப்பகுதி இதன் நீர் பிடிப்பு பகுதியாகும். கும்பரவாணி, கல்லுப்பள்ளம், வரட்டுப்பள்ளம் ஆகிய பள்ளங்கள் வழியாக நீர்வரத்து இருக்கும். இந்த அணையினால் மூன்றாயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகின்றது. இதில் வாழை, கரும்பு, பருத்தி, மஞ்சள், எள் போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்து

விவசாயிகள் பயன் பெறுகின்றனர். மேலும் வனப்பகுதியில் உள்ள வனக்குட்டைகள் யாவும் வற்றிவிட்டாலும், யானை, புள்ளிமான், காட்டுப்பன்றி, கடமான், செந்நாய் உள்ளிட்ட வன விலங்குகளுக்கு வரட்டுப்பள்ளம் அணை குடிநீர் ஆதாரமாக உள்ளது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பர்கூர் மலைப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக வரட்டுப்பள்ளம் மற்றும் கும்பரவாணி பள்ளம் வழியாக நீர்வரத்து ஏற்பட்டு 17 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் மூன்று அடி உயர்ந்து அணையின் நீர்மட்டம் தற்போது 20 அடியை எட்டியுள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது: ஒகேனக்கல்லில் மீண்டும் குளிக்க அனுமதி**



மேட்டூர், அக் 9–

கர்நாடகா நீர்பிடிப்பு மற்றும் ஒகேனக்கல் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்ததால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது.

கடந்த செவ்வாய்கிழமை 20 ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீர் வந்ததால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஒகேனக்கல் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

நேற்று 3–வது நாளாக தடை நீடிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று காவிரி ஆற்றில் நீர்வரத்து 16 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. இதனால் ஒகேனக்கல் மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதைக்குள் தண்ணீர் சென்றது. இன்று காலை நீர்வரத்து மேலும் குறைந்தது. இதையடுத்து இன்று காலை 9 மணி முதல் ஒகேனக்கல் அருவிகளில் குளிக்க சுற்றுலா அனுமதிக்கப்பட்டனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த 2–நாட்களாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வந்தது. நேற்று காலை 20 ஆயிரத்து 970 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்று காலை இது குறைந்து 12 ஆயிரத்து 460 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணை நீர்மட்டம் 70.60 அடியில் இருந்து 70.78 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 10 ஆயிரத்து 600 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் 10 லட்சம் மெட்ரிக் டன் உரம்: அமைச்சர் செல்லூர் ராஜூ அறிவிப்பு

விவசாயிகளுக்கு நடப்பாண்டில் 10 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரிய நேரத்தில் தடையின்றி வழங்கப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ அறிவித்துள்ளார்.கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தலைமையில் கூட்டு றவு ஒன்றிய அரங்கில் நேற்று நடந்தது.

அப்போது அமைச்சர் செல்லூர் ராஜூ கூறியதாவது: கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக கடந்த 2011 முதல் 45 லட்சத் திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.20 ஆயிரத்து 40 கோடியே 80 லட்சம் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு ரூ.5 ஆயிரத்து 500 கோடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.2 ஆயிரத்து 694 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 10 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான டிஏபி, யூரியா, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உரங்கள் போதிய அளவு இருப்பு வைத்து உரிய நேரத்தில் தங்குதடையின்றி வழங்கப்படும்.

தமிழகத்தில் உள்ள 100 அம்மா மருந்த கங்கள், 194 கூட்டுறவு மருந்தகங்களில் ரூ.260 கோடியே 39 லட்சம் மதிப்பில் மருந்து கள் விற்கப்பட்டுள்ளன. 58 பசுமை நுகர் வோர் கடைகள் மூலம் ஒரு கோடியே 8 லட்சம் கிலோ காய்கறிகள் ரூ.31 கோடியே 12 லட்சத்துக்கு விற்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சென்னையில் பலத்த மழை: 4 நாட்களுக்கு மழை நீடிக்கும்-வானிலை மையம் தகவல்**

சென்னை, தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்பட்ட வெப்பச்சலனத்தால் தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

சென்னையில் நேற்று முன்தீனம் இரவு 8 மணியளவில் மழை ஆரம்பித்தது. எழும்பூர், சென்ட்ரல், பாரிமுனை, மயிலாப்பூர், அடையார், துரைப்பாக்கம், சோழிங்க நல்லூர், தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், வண்டலூர், ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி, அண்ணா நகர், அம்பத்தூர், ஆவடி, மணலி, திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை, வியாசர் பாடி, கொடுங்கையூர், புரசைவாக்கம் உள்பட பல இடங்களில் 1 மணி நேரம் கனமழை பெய்தது.அதன்பிறகு நள்ளிரவில் அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்தது. அதிகாலை வரை மழை தூறல் விழுந்தது.இதன் காரணமாக ஆங்காங்கே தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதிகளான பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம் ஏரி பகுதிகளில் பரவலாக மழை பெய்தாலும் வறண்ட நிலையில் ஏரிகள் இருந்ததால் தண்ணீர் வழிந்தோடவில்லை.நேற்று காலையிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில பகுதிகளில் தூறல்கள் விழுந்தன. நேற்று முன்தீனம் இரவு முதல் இன்று காலை வரை பெய்த மழை அளவு விவரம் வருமாறு:– திருவாலங்காடு 12 செ.மீ, செஞ்சி 10, அரக்கோணம் 7, குடவாசல் 6, ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம், காவேரிப்பாக்கம், பூந்தமல்லி, பூண்டி 5 செ.மீ, பள்ளிப்பட்டு, மயிலடி, மகாபலிபுரம், செம்பரம்பாக்கம், திருச்சி, கலவை, திருவள்ளூர், திருத்தணி 4 செ.மீ.ஆர்.கே.பேட்டை, காஞ்சிபுரம், தாமரைப்பாக்கம், சோளிங்கர் 3 செ.மீ., சென்னை விமான நிலையம், கிண்டி, தரமணி, மெரீனா கடற்கரை, மாதவரம், ஆவடி, புழல், காட்டுப்பாக்கம், குளித்துறை, நாகர்கோவில், கன்னியாகுமரி, தேவாளை, இலுப்பூர் 2 செ.மீ.செங்குன்றம், கடலூர், கேளம்பாக்கம், சோழவரம்,

கீரனூர், தக்கலை, மேட்டூர், செய்யூர், செங்கல்பட்டு, வால்பாறை, திருச்சி, வாலாஜா, திருப்பத்தூர், ரணியல், வடசென்னையில் 1 செ.மீ.

இது பற்றி சென்னை வானிலை மைய அதிகாரி கூறியதாவது:–

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தொடர்ந்து நிலவிய வெயில் காரணமாக 2 நாட்களுக்கு முன்பு வெப்பச் சலனம் ஏற்பட்டு வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவானது.இதனால் டெல்டா மாவட்டங்கள் உள்பட வட தமிழகத்தில் ஆங்காங்கே இடியுடன் மழை பெய்து வருகிறது. இந்த மழை இன்னும் 4 நாட்களுக்கு நீடிக்கும். 12–ந்தேதிக்கு பிறகு உள்மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு உள்ளது.குறிப்பாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, சேலம், கோவை, நீலகிரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய இடங்களில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும்.இவ்வாறு அவர் கூறினார்.

**தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு கொள்ளளவு 8 லட்சத்து 15 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயரும்: அமைச்சர் இரா.காமராஜ்**



சென்னை, முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணையின்படி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வு கூட்டம், நேற்று சென்னை, கிண்டி சேமிப்பு கிடங்கு நிறுவன தலைமை அலுவலகத்தில், உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், கிடங்குகள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைத்து, பொதுமக்களுக்கு உரியதரத்துடன் விநியோகம் செய்ய வேண்டுமென முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதன்படி, 2011 முதல் இன்று வரை தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 68 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 16 சேமிப்பு கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம், திருச்செங்கோடு, ராமநாதபுரம், காரைக்குடி, தேனி, திருநெல்வேலி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இடங்களில், 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 72 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 15 கிடங்குகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர, தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி, பாப்பிரெட்டிபட்டி, தஞ்சாவூர், அருப்புக்கோட்டை, மயிலாடுதுறை, சேலம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 42 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 10 கிடங்குகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கொள்ளளவு 6 லட்சத்து 33 ஆயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து 8 லட்சத்து 15 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று தெரிவித்த அமைச்சர், அனைத்து கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடித்து கிடங்குகளை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களை கேட்டுக்கொண்டார்

2011-ல் 82 சதவிகிதமாக இருந்த கிடங்குகளின் பயன்பாட்டு அளவு தற்போது, 93 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்நிறுவன கிடங்குகளில், விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை சேமிப்பில் வைத்து, கிடங்கு சேமிப்பு ரசீது மூலம் வங்கிகளிலிருந்து கடன் வசதி பெறும் திட்டத்தின் கீழ், 2011 முதல் இன்று வரை 9 ஆயிரத்து 834 பயனாளிகள் 573 கோடி ரூபாய் கடன் வசதி பெற்றுள்ளனர். அம்மாவின் சிறப்பான தொடர் நடவடிக்கைகளின் பயனாக, டெல்லியில் நடைபெற்ற தேசிய சேமிப்பு கிடங்குகள் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை ஆணைய கூட்டத்தில், 2013ம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட முதல் மூன்று பரிசுகளும், இரண்டு சிறப்பு பரிசுகளும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கே வழங்கப்பட்டது. மீண்டும் 2014ம் ஆண்டிலும் முதல் மூன்று பரிசுகளும் தமிழ்நாட்டிற்கே கிடைத்தது. அரசு நிறுவனங்களுக்கு 5% முதல் 25% வரையிலும், விவசாயிகள் மற்றும் விலையில்லா அரிசி உள்ளிட்ட பொருள்களின் சேமிப்பு கட்டணத்தில் 30% வரையிலும் தள்ளுபடி அளிக்கப்படுகிறது

இக்கூட்டத்தில் உணவுத்துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா, சேமிப்பு கிடங்குகள் நிறுவன நிர்வாக இயக்குநர் கே.நாகராஜன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு: ஒகேனக்கல்லில் குளிக்கத்தடை**



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்வதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில், பலத்த மழை பெய்து வருவதால், காவிரி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால், அருவிகளில் குளிக்க நேற்று 3வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக - தமிழக எல்லை பகுதியாக பிலுகுண்டுவில், நேற்று முன்தினம் மாலை சுமார் 23ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. நேற்று காலை சற்று குறைந்து 20 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு உயர்ந்துள்ளது.

கடந்த 2 தினங்களுக்கு முன்பு மேட்டூர் அணைக்கு 7 ஆயிரத்து 299 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் வரத்து, நேற்று முன்தினம் காலை 18 ஆயிரத்து 899 கனஅடியாக அதிகரித்தது. நேற்று காலை இது 20 ஆயிரத்து 970 கன அடியாக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் காலை இது 69.57 அடியாக உயர்ந்தது. நேற்று காலை நிலவரப்படி நீர்மட்டம் 70.60 அடியாக உள்ளது.

கடந்த 2 நாட்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்துக்காக 10 ஆயிரத்து 600 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைவிட நீர்வரத்து அதிகமாக உள்ளதால், நீர்மட்டம் மீண்டும் உயர தொடங்கி உள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டியதால், அணையில் வெளியே தெரிந்த நந்தி சிலை மற்றும் கிறிஸ்தவ ஆலை கோபுரம் ஆகியன தற்போது தண்ணீரில் மூழ்கி உள்ளது.